மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு
அசல் வழக்கு எண். 9/2024

வா.சா. 1 (சிவத்தையா)

நாள் 04.08.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்குச் சொத்திற்க்கான தற்போதைய சர்வே எண் 960/4 B என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண் 960/ 4B என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். புல எண் 960/ 4B முதல் முதலில் எந்த ஆண்டில் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. புல எண் 960/ 4Bக்கான பழைய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண் 960/ 4Bல் சொத்தின் மொத்த அளவு 79 சென்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண் 960/ 4Bல் சொத்தின் உரிமையாளர்கள் நான்கு நபர்கள் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நான்கு நபர்களுக்கும் இடையேயான உறவுமுறை குறித்த எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நான்கு நபர்களுக்கும் எனக்கும் இடையேயான உறவுமுறை குறித்து பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உறவு முறை குறித்து சொல்லி உள்ளேன். கூட்டு உரிமையாளர்களுக்கு சொத்தின் மொத்த விஸ்தீரனத்தில் எவ்வளவு பங்கு உரிமை உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல எண் 960/ 4 எந்த ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்றும் உட்பிரிவு செய்யப்பட்ட பின்பு வழங்கப்பட்ட புல எண் குறித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணங்கள் எதையும் நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை யார் எப்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து பெற்றார்கள் என்றால் 30.01.2012 அன்று ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலக நகல் எடுப்பதற்கு முன்பு எனக்கு அது பற்றி தகவல் தெரியாது என்றால் வில்லங்க சான்றிதழ் மூலம் தகவல் தெரிந்து கொண்டேன். நான் வில்லங்க சான்றிதழ் மூலமாக தகவல் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் மூன்று சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று சொத்துகளுக்கும் நான்கு எல்லைகள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின்

மூலம் எனது தாத்தா கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்து விஸ்தீரணம் ஆறு சென்ட் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 23 சென்ட் என்றால் 9.50 ஏர். எனது தாத்தா 6 சென்ட் நிலத்தை கிரயம் வாங்கியதாக சொல்லி உள்ள நிலையில் மீதி சொத்து எனக்கு எவ்வாறு பார்த்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவிற்கான பூர்வீக சொத்து ஆகும். பாக்கி 17 சென்ட் எனது தாத்தாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்960/4பி உள்ள 24 சென்ட் நிலம் கருப்பன தேவர், புழுகத் தேவர், முத்துசாமி தேவர் மற்றும் சடையை தேவர் ஆகிய நான்கு நபர்கள் பெயரில் பட்டா எண் 761 ஏற்பட்டிருந்ததாக வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரயம் கொடுத்தவருக்கும் கிரையம் பெற்றவருக்கும் இடையேயான உறவுமுறை குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா புழுகத் தேவர் எந்த வருடத்தில் காலம் சென்றார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாத்தா இறக்கும்பொழுது என்ன வயது இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாத்தா உயிருடன் இருக்கும் பொழுது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மகன்களுக்கு பாகம் பிரித்து கொடுத்து விட்டார் என்று பிராதில் சொல்லியுள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்போது எனக்கு சிறுவயது என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது தாத்தா பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவும் அப்பாவுடன் உடன் பிறந்தவர்களும் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவும் உடன் பிறந்தவர்களும் எந்த சொத்துக்களை எல்லாம் பிரித்துக் கொண்டார்கள் என்றும் யார் யாருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்றும் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண் 1280 எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. பட்டா வழங்குவதற்கு யார் மனு செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பூர்விகமாக சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டிருந்ததால் பட்டம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பட்டா எங்களிடம் இருந்தது. பட்டா 1280க்கான முந்தைய பட்டா எண் என்ன என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் தவறானது என்றும் மோசடியாக பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும் இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கும் வழக்குச் சொத்து சம்பந்தமாக எந்த வருடத்தில் இருந்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் 2013 வருடத்தில் இருந்து. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2012 வருடத்தில் இருந்து பிரச்சனை இருந்து வந்ததாக சொல்லி உள்ளது சரியா தவறா என்றால் சரிதான். 18.12.2012

அன்று வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் எனது தாத்தா 18 சென்ட் நிலம் வாய்மொழிக் கிரையமாக பாதிக்கப்பட்டது என்று சொல்லி உள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்திற்கு 2012 வருடத்திற்கு முன்பு தீர்வை எதுவும் செலுத்தி உள்ளேனா என்றால் செலுத்தி உள்ளேன். மேற்படி தீர்வை ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை வந்த பின்பு வா.சா.ஆ.5 ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் எனது அப்பா பெயரிலும் சித்தப்பா பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து எனது சித்தப்பா எனது அப்பாவிற்கு ஆவணங்கள் எதுவும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களில் விவசாயம் எதுவும் செய்து பயிரிடப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 1384 பசலியில் சொத்தின் சச்சின் உரிமையாளர் புளுகத்தேவர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் எனது தாத்தா ஆவார். பட்டா எண் 761 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1384 பசலிக்கு பின்னர் 1390 ஆண்டிற்கான பசலி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண் 1280 க்கான உரிமையாளர் தம்பத் தேவர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 761, பட்டா எண்1280 ஆக இடைப்பட்ட காலத்தில் தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மாற்றம் செய்யப்பட்ட விபரம் தெரியும் என்று வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் மோசடியாக வழக்குக்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தில் வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா. ஆ.3 எங்களுக்கு தொடர்பில்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தை கொண்டு கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.8 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 2012 ஆம் வருடத்தில் எனது தகப்பனார் பெயரில் மோசடியாக பட்டா வழங்கப்பட்டது தெரிந்து பிரதிவாதிகள் சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் பட்டா திருத்தம் செய்ய கேட்டு மனு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அதற்கு நாங்கள் பதில் தெரிவித்தோம் மற்றும் சான்றாக ஆவணங்களும் கொடுத்தோம். மேற்படி விசாரணையை தொடர விடாமல் நிறுத்தி வைப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது அப்பா மீது காவல் நிலையத்தில் சொத்தை அபகரிக்க முயன்றதாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆவணங்களை தாக்கல் செய்தோம். மேற்படி புகாரின் அடிப்படையில் எனது அப்பா மீது முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.. மேற்படி குற்ற வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் வா.சா.ஆ. 13 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் ஆறுமுகத்தேவர் வீடு உள்ளது என்றால் அவர் வீடும் உள்ளது அதனைத் தொடர்ந்து சுப்பையா தேவர் மகன் ராசா, புளுகு தேவர் மகன் நல்ல தேவர், வெள்ளைச்சாமி என்ற வெள்ளத் தேவர் ஆகியோர்களின் வீடு உள்ளது. ஒன்றாவது பிரதிவாதியின் கணவர் ஆறுமுகத் தேவருக்கு சொத்தில் புழங்கி கொள்வதற்கு உரிமை கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புளுகத் தேவர், சடைய தேவர் மற்றும் இருளப்பத் தேவர் ஆகிய பெயர்கள் எங்கள் ஊரில் சுமார் 30, 40 வருடங்களுக்கு முன்பாக பழக்கமாக எல்லோர் வீட்டிலும் வைப்பார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவின் தாத்தா பெயர் சடைய புழுகத்தேவர் இல்லை என்றும் தம்பத் தேவர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்ததில்லை வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சடைய புளுகத்தேவர் பிரதிவாதிகளின் முன்னோர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள முத்துசாமி தேவர் 1வது பிரதிவாதியின் கணவரின் தகப்பனார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி ஊராட்சி மன்ற தலைவியாக இருந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் அது அவர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல வழக்கு சொத்துக்கள் என் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. 3 முதல் 5 பிரதிவாதிகள் வேலை விஷயமாக வெளியூரில் தங்கி வந்தார்கள் என்றால் சரியல்ல. முத்துசாமி உள்ளூரில் இருந்து வந்தார். மேற்படியார்கள் வெளியூரில் தங்கி வந்ததை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு வழக்கு சொத்திற்கு பொய்யாக பட்டா பெற்று அதை அபகரிக்க முயன்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு உண்மையான வழக்கு அல்ல என்று சொன்னாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு